**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 16 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான 32 பரப்பு விஸ்தீரணமுடைய இந்து மயானக் காணியில் வெளித்தரப்பினர்களின் அத்துமீறிய குடியமர்வு மற்றும் சபையினால் ரூபா 3,242,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 60 பரப்பு விஸ்தீரணமுடைய வலிநுங்கை காணியின் உரிமைத்தன்மை தொடர்பில் மாவட்ட நீதிமன்றில் கடந்த 15 வருடங்களாக வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பிலான விடயங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 191,000 பெறுமதியான உழவு இயந்திரப் பெட்டி சபைக்கு உரித்தற்றதாக இருந்தபோதிலும் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையினால் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த மோட்டார் றோலர் மற்றும் மடிக்கணனி என்பவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 02 தொடக்கம் 05 வருடங்களாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் பொறி இயந்திரத்தின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 33,151 | மூன்று வகையான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் கடந்த 02 தொடக்கம் 05 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றுநிருபம் | | |
| 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 05 வாகனங்களுக்கு ஒரு வருடகாலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 88,725,538 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 104,354,496 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 14,028,700 | – | 15,105,496 | 17,254,352 | 2,887,000 | – | 1,791,166 | 5,901,887 |
| வாடகைகள் | 41,083,000 | – | 41,137,004 | 233,695 | 36,521,800 | – | 34,293,706 | 137,300 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,293,000 | _ | 8,305,231 | - | 12,310,000 | _ | 20,000,881 | - |
| ஏனைய வருமானம் | 31,701,000 | – | 63,969,502 | 123,664,245 | 25,393,500 | – | 50,343,488 | 117,836,427 |
| | **93,113,700** | | **128,517,233** | **141,152,292** | **77,112,300** | | **106,429,241** | **123,875,614** |

(ஆ) சபையினால் வீதவரிகள் சேகரிப்பிற்கான பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நிலுவைகளானவை மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் திரண்டு வந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 வீதவரிகள்

-------------

வீதவரி நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 10,926,596 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடை வாடகை நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 92,090 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுமொத்தம் ரூபா 2,120,526 சந்தைக் குத்தகைகள் கடந்த 05 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

------------------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 35,650,806 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

### (அ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் செயற்பாடுகளின் செயலாற்றலினை ஆரம்பிப்பதன் மூலம் ரூபா 1,200,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தபோதிலும், நாளது வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை பெற்றுக்கொள்ளாது அந்த செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

(i) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தினால் சபையின் சுன்னாகம் கொத்தியாலடிப் பிரதேசத்தில் 08 செப்தெம்பர் 2016 ஆம் திகதி தொடக்கம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாணிப்பு வேலைகள் 13 மார்ச் 2018 இல் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இம் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாண வேலைகள் நாளதுவரை பூர்த்தி செய்யப்பட்டிராத காரணத்தால் சபையின் எல்லைக்குட்பட்ட மலக்கழிவுகளை சுத்திகரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

(ii) 2015 ஆம் ஆண்டில் புன்னாலைக்கட்டுவன் விளையாட்டு மைதானத்திற்கு 407 அடி நீளமான சுற்றுமதில் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,250,000 இல் ரூபா 1,200,000 பெறுமதியான 222 அடி நீளமுடைய சுற்றுமதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பிரதேச மக்களினது எதிர்ப்பு காரணமாக எஞ்சிய 185 அடி சுற்றுமதிலும் நாளதுவரை நிர்மாணிக்கப்பட முடியாத நிலையிலுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 13 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்

கடந்த 15 ஆண்டுகளாகச் சபையின் பயன்பாட்டிலிருந்து வந்த 06 வாகனங்கள் நாளதுவரை சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

### 3.3.2 பராமரிப்புக்கள் மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை

மருதனார்மடம் சந்தைக் கட்டடத்தின் மேற்றள நிர்மாணித்தலுக்காகப் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் பாதுகாப்பற்ற முறையில் துருப்பிடித்துக் காணப்படுகின்றது. மேலும் கீழ்றறளத்தின் கூரை செப்பமானதாக அமைக்கப்பட்டிருக்காமையினால் வெடிப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் மழைக் காலங்களில் நீர்க்கசிவுகள் ஏற்படுவதாக கடை உரிமையாளர்களால் சபைக்கு அறியக் கொடுக்கப்பட்டிருந்தும் நாளதுவரை சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.** **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 53,204 தொடக்கம் ரூபா 32,337,579 அல்லது 0.01 சதவீதம் தொடக்கம் 19 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 01 தொடக்கம் ரூபா 13,488,922 அல்லது 0.12 சதவீதம் தொடக்கம் 136 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| கணக்கீடு | அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் என்பன பராமரிக்கத் தவறியமை. |